# *ஆற்றங்கரை ஓரம்*

## 1. ஆற்றங்கரை ஓரம் நாவலின் ஆசிரியர் யார் ?

வெ.இறையன்பு

## 2 வெ .இறையன்புவின் ஆசிரியர் குறிப்பு வரைக .

பெயர் :வெ .இறையன்பு

பிறப்பு:1963 செப்டம்பர்

ஊர் : சேலம் ,காட்டூர்

சிறப்பு :இந்திய ஆட்சிப்பணி தேர்வுக்கு தமிழை ஒரு விருப்ப பாடமாக

படித்து வெற்றி பெற்றவர் .

படைப்புகள் : தமிழில் 33 நூல்கள் எழுதி இருப்பதுடன் பட்டிமன்றங்களில் நடுவராக இருந்து சிறப்பு பெயர் பெற்றவர் .

## 3 . இறையன்புவின் படைப்புகள் யாவை ?

வாய்க்கால் மீன்கள் ,முகத்தில் தெளித்த சாரல் ,

மென்காற்றில் விலை சுகமே ,சின்ன சின்ன வெளிச்சங்கள் ,

உள் ஒளி பயணம் ,பூபாலதிருக்கொரு புல்லாங்குழல் .

## 4 .ஆத்தங்கரை ஓரம் எனும் நாவல் எந்த ஊரின் தமிழ் சங்கத்தால் பரிசு பெற்றது ?

திருப்பூர் தமிழ் சங்கத்தால் பரிசு பெற்றது .

## 5 .ஆத்தங்கரை ஓரம் நாவலில் வரும் ஊரின் பெயர் என்ன ?

சிந்தூர்

## 6 .ஆத்தங்கரை ஓரம் நாவல் எதனை மையமாக கொண்டு இயற்றப்பட்டது?

இயற்கையோடு இணைந்து வாழும் பழங்குடியினர் வாழ்க்கையையும் ,அவர்களுக்கு ஏற்பட்ட அவலங்களையும் படம் பிடித்து காட்டுகிறது .

## 7 .பழங்குடியினர் எதை ஒரு பொருட்டாக மதிக்க வில்லை ?

பணத்தை ஒரு பொருட்டாக மதிக்க வில்லை .

## 8 .பழங்குடியினர் எதை மிகப்பெரிய சேமிப்பாக கருதினர் ?

அவர்கள் வளர்க்கும் மாடுகளும் ,கன்றுகளும் .

## 9 .அணை கட்ட துவங்க போகிற நிகழ்வு தெரிந்த பின்னர் எதிர்த்து போராட துணிந்தவர்கள் யார் ?

கோவிந்தபாய் மற்றும் அவர் மகன் சிமன்.

## 10 .வெள்ளத்திற்கு தன்னை அர்ப்பணித்து கொண்டவர் யார் ?

கோவிந்தபாய்

## 11 .கோவிந்தபாயின் வைராக்கியமான வார்த்தைகள் யாவை ?

என்னை வளர்த்த ஆறு விரும்பினால் என்னை இழுத்துக்கொண்டு போகட்டும் .

## 12 .யாருடைய வீட்டை கடந்து சிந்தூர் கிராமத்துக்கு செல்ல வேண்டும் ?

கோவிந்தபாய் வீட்டை .

## 13 . சிந்தூர் ஊரின் தோற்றம் குறித்து எழுதுக ?

ஐம்பதுக்கு மேற்பட்ட கிராமங்களை கொண்டது ,அதில் வசித்தவர்கள் அனைவரும் பழங்குடியினர் ,அவர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வாதாரத்துடன் வாழ்ந்தனர் .

## 14 .எதை பயன்படுத்தி அவர்கள் நகர்ப்பகுதிக்கு சென்றனர் ?

தோணி .

## 15 .கோவிந்தபாய் யார் ?

தனது கிராம மக்களுக்காக போராடி உயிர் விட்டவர் .

## 16 . சிமன் யார் ?

கோவிந்தபாயின் மகனான இவர் தந்தையின் எண்ணத்தையும் ,தனது கிராம மக்களின் நலனுக்காகவும் அனைத்தயும் துறந்து ,காதலியையும் தொலைத்து இறுதிவரை போராடி சிறைக்கு சென்றவர் .

## 17 . சிந்தூர் தலைமையகம் எது ?

சிந்தூரிலிருந்து நூறு மைல் அப்பால் உள்ள துலியா ஆகும் .

## 18 .ராதா பட்டங்கர் பாத்திர படைப்பு பற்றி கூறு ?

தனது வாழ்வையே பழங்குடி மக்களுக்காக அர்ப்பணித்து சிறைக்கு சென்றவர்,இறுதிவரை இலட்சியத்தை கைவிடாத வீர பெண்மணியாக வாழ்ந்தவர் .

## 19 .ராதா பட்டங்கர் யார் ?

அவர் ஒரு சமூக ஆர்வலர் .

## 20 .சுனில் எங்கு என்னவாக பணியாற்றுகிறார் ?

அவர் பம்பாயில் அரசின் திட்ட குழுவின் உறுப்பினராக பணியாற்றுகிறார்.

## 21 . சுனில் குப்தா எப்படிப்பட்டவர் ?

திட்டக்குழுவின் உறுப்பினராக இருந்த இவர் ராதா பட்டங்கரின் கணவர் ,இவர் மனைவியின் செயலுக்கு இறுதிவரை எதிர்ப்பாக இருந்தவர்

## 22 . ராதாவின் ஆணித்தரமான வார்த்தைகள் யாவை ?

இதுதான் இந்தியாவில் உருவாகும் மிகப்பெரிய அணையாக இருக்கும் ,இனிமேல் இன்னொரு பெரிய அணை உருவாகாது .

## 23 . நிதின் பாத்திர பண்பு பற்றி கூறு ?

நிதின் ராதா பட்டங்கரின் நண்பர் எதற்கெடுத்தாலும் உணர்ச்சி பொங்க பேச கூடியவர் .

## 24 .ராதா பல்கலைக்கழகத்தில் என்ன தலைப்பில் உரை நிகழ்த்தினார்?

பழங்குடியினர் பிரச்சினைகள் .

## 25 . சிந்தூரில் அணை கட்டினால் யாரெல்லாம் பாதிக்க படுவர் ?

வர்த்தகர்கள் ,பெரும்புள்ளிகள் ,அரசியல்வாதிகள் ,செல்வந்தர்கள் ஆகியோருடைய அடுக்கு மாடி கட்டிடம் தண்ணீருக்குள் போய்விடும் .

## 26.சுதிர் தனது ஆதங்கத்தை எவ்வாறு வெளிப்படுத்தி உள்ளார் ?

* இவ்வளவு பெரிய அணையை கட்டித்தான் தீர வேண்டுமா ?
* அழகான காடுகளை அழித்துத்தான் ஆக வேண்டுமா ?
* அதிலுள்ள விலங்குகளை சாகடிக்கத்தான் வேண்டுமா ?

## 27 .பழங்குடியினருக்காக தங்கள் வாழ்க்கையை தொலைத்தவர்கள் யார் ?

* நிதின்
* சந்தீப்
* ராதா

## 28 .காவலர்களால் சிறைக்குள் தள்ள பட்டது யார் ?

நிதின்

## 29 .சந்தீப் என்ன செய்தி கேட்டு ஆடிப்போனான் ?

நிதினை பார்க்க சென்ற சந்தீப் சிறையில் அவன் தற்கொலை செய்துகொண்டான் என்ற செய்தி கேட்டு ஆடிப்போனான் .

## 30 .சுக்லாவின் பாத்திர பண்பு என்ன ?

நீர் பாசன துறை அமைச்சராக இருந்து அணை கட்டுமானத்திற்கு காரணமாக இருந்தவர் .

## 31 .சுக்லாவின் நோக்கம் என்ன ?

மறைவாக இருந்து ஆட்களை ஏவி விடுவதுதான் சுக்லாவின் நோக்கம்.

## 32 .யூதிகாவின் பணி என்ன ?

யூதிகா உண்மையும் நேர்மையுமானவர் ,அவர் பார்வையற்றோர் ,அனாதை பள்ளி என எல்லா இடத்துக்கும் போய் வகுப்புகள் எடுப்பதை தனது பணியாக கொண்டிருந்தார் .

## 33 .வரதட்சிணை வாங்காமல் திருமணம் செய்து கொண்டவர் யார் ?

சுதீர் .

## 34 .அணை கட்ட எவ்வளவு நிலம் தேவைப்பட்டது ?

320000 ஹெக்ட்டோர் நிலம் தேவைப்பட்டது .

## 35 .சுதீர் எந்த மாநிலத்தை சேர்ந்தவர் ?

பீஹார் .

## 36 .நீர்பாசனத்துறை அமைச்சர் யார் ?

சுக்லா.

## 37 . வெ.இறையன்பின் படைப்புகள் யாவை ?

* வாய்க்கால் மீன்கள்
* ஓடும் நதியின் ஓசை
* முகத்தில் தெளித்த சாரல்
* பூபாலதிருக்கொரு புல்லாங்குழல்
* பிடிப்பது சுகமே

## 38 .ஆத்தங்கரை ஓரம் நாவலின் துவக்கம் எவ்வாறு இருந்தது ?

ஆத்தங்கரை ஓரத்திலே இன்பமாக இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வந்த சித்தூர் பழங்குடி மக்களை அரசு அப்பகுதியில் அணை கட்டுவதற்காக இட மாற்றம் செய்வதற்கு முயற்சி செய்கிறது .

## 39 . நமது கடமையாக சுதிர் கூறியது என்ன ?

அணை கட்டும்போது ஏற்படும் வன இழப்பிற்காக வேறு வனம் உருவாக்கணும் என்று சட்டம் இருந்தாலும் இந்த காட்டிற்கு இணையாக எந்த காட்டையும் உருவாக்க முடியாது என்றும் அங்கு வெறும் மரம் ,செடி ,கொடி மட்டும்தானா இருக்கின்றது என கூறினார் .

## 40 . சிந்தூர் நகரின் நிலை குறித்து எழுதுக ?

பழங்குடி மக்களும் அவர்களின் அவல நிலையை புரிந்துகொண்டவர்களும் இணைந்து அரசு அதிகாரிகளும் சூழ்ச்சியாய் அணை கட்டுமானம் தொடர்ந்தனர் ,தொடர் மழை காரணமாக அங்கிருந்த அனைத்து குடிசைகளும் நீரில் அடித்து செல்ல பட்டது ,அதோடு கோவிந்தபாய் அவர்களும் அடித்து செல்லப்பட்டார் .

## 41 .ஆத்தங்கரை ஓரம் நாவலின் முடிவு என்ன ?

அணை கட்டுவதால் எழுந்த பிரச்சினைகள் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களில் வெடித்ததால் இதுவே இந்தியாவில் கட்டப்படும் இறுதி அணை என்ற ராதா பட்டங்கரின் கூற்றோடு நிறைவுறுகிறது .

## 42. இளைஞன் கோகுல் என்பவனுக்காக சிறை சென்றது யார் ?

நிதின்

## 43 .ஆத்தங்கரை ஓரம் நாவலின் உச்சம் என்ன ?

சிந்தூரில் அணை கட்டும் பணி இந்தியா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது .மாநிலத்தின் தலைமை செயலகம் வரை கடிதம் அனுப்பப்பட்டு போராட்டங்கள் நடந்தது .

## 44 .கோவிந்தபாய் ஏன் உயிர் தியாகம் செய்தார்?

அரசு அதிகாரிகளும் சூழ்ச்சியாய்அணை கட்டுமானம் தொடர்ந்தனர் ,தொடர் மழையின் காரணமாக அங்கிருந்த அணைத்து குடிசைகளும் நீரில் அடித்து செல்ல பட்டது ,அதோடு கோவிந்தபாய் அவர்களும் அடித்து செல்லப்பட்டார் .

## 45 .நம் முன்னோர்கள் நமக்கு செய்தது போல நம் சந்ததிக்கு நாம் என்ன செய்ய வேண்டும் ?

குறைந்த பட்சம் அவர்கள் நம்மிடம் ஒப்படைத்த பூமியை அப்படியே சீர்குலையாமல் வருங்கால சந்ததிக்கு நாம் ஒப்படைக்க வேண்டியது நம் கடமையாகும் .

## 46 .எதை பார்த்து சந்தீப் வியந்தார்?

இயற்கை சிலந்தி வலை போல பின்னப்பட்டிருக்கிறது ,இந்த மரங்கள் எல்லாம் வெறும் மரங்கள் மட்டும்தானா ,ஒவ்வொரு மரமும் தென்றலை வருடி மேகத்தை தாலாட்டி எப்படில்லாம் பரிமளிக்கிறது என்று வியந்து போனார் .

## 47 .சிமனுக்கு உதவியாக இருந்த இளைஞர்கள் யார் ?

அர்ஜுன் ,திலக் , சம்பு தயாள்.

## 48 .ராதா பட்டங்கரின் கணவர் யார் ?

சுனில் குப்தா

## 49 .யூதிகா என்பவர் யார் ?

சுதீரின் மனைவி

## 50 .மனவளர்ச்சி குன்றிய சிறுவன் யார்?

கோகுல்

## 51 .குல்கர்னி என்பவர் யார் ?

சிந்தூர் மாவட்ட ஆட்சியாளர் ,பழங்குடி மக்களுக்கு எதிராக செயல் பட்டவர் .

## 52 .ஆத்தங்கரை ஓரம் நாவலின் கதை மாந்தர்கள் யாவர் ?

* கோவிந்தபாய்

* சிமன்

* ராதா பட்டங்கர்

* சுதிர்

## 53.ஆத்தங்கரை ஓரம் நாவலில் வரும் கிளை மாந்தர்கள் யாவர் ?

* சந்தீப் நிதின் , கோகுல் , சுனில்

அர்ஜுன் ,திலக் , சம்பு தயாள்

சுக்லா , பாபா ஆம்டே, குல்கர்னி

54 . சிந்தூர் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் யாவர் ?

வர்த்தகர்கள் ,பெரும்புள்ளிகள் ,அரசியல்வாதிகள் .

55 .எத்தனை லட்சம் வனப்பகுதி பரப்பளவு எந்த அணையால் மூழ்கியது ?

இரண்டு லட்சத்து அறுபதாயிரம் ஏக்கர் .

56 .எதுஅணை கட்டுமானத்தில் பின்பற்றபடவில்லை என குற்றச்சாட்டாக இருந்தது ?

பயன்பாட்டு விகிதம் .

57 . சுதீரின் கடிதம் வெளிப்படுத்தும் பழங்குடியினரின் அவலநிலை என்ன ?

பழங்குடியினர் லட்சம் பேர் தங்களது வீடு ,நிலம் ,சொத்து ,அமைதி கலாச்சாரம் ,நிம்மதி ,பாரம்பரியம் ,உறவுகள் அனைத்தையும் இழந்து நிற்க வேண்டி இருக்கும் .

58 .சுதிர் என்ன படித்திருந்ததாக குறிப்பிட்டுள்ளார் ?

கட்டுமான பொறியாளர்

59. சிந்தூருக்கு பதிலாக எந்த ஊரில் அணை கட்டலாம் என சுதிர் கூறினார் ?

லக்ஷ்மன் நகர்

60.கோவிந்தபாய் சேமித்து வைத்திருந்த பணம் யாருக்காக எத்தனை வருடமாக சேமிக்க பட்டு இருந்தது ?

சிமனுடைய திருமணத்திற்காக ,பத்து வருடமாக சேர்த்து வைத்திருந்தார் .